மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வேளாண்மைத் துறையின் நில வள—நீர்வளப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ், உயரமான தடை அணைக்கட்டுகள் எதுவும் கட்டப்படுவதில்லை. நடுத்தர உயரமுள்ள குறைந்த உயரமுள்ள, தடை அணைக்கட்டுகளே கட்டப்படுகின்றன. பெருந்தடை அணைக்கட்டுகள் என வழங்கப்படுகிற இடைத்தர உயரமுள்ள தடை அணைக் கட்டுகள் எட்டு, 1962 முதல் 1966 வரை மண்வளப் பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் பகுதியாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ளன.

தேவையானபோது, இத்தகைய அணைக்கட்டுகள் இம்மாநிலத்தில் ஏனைய பகுதிகளில் கட்ட எண்ணியுள்ளது.

Colachel–Neerodi Coastal Road

* 175 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state —

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a coastal road from Simon colony at Colachel to Neerodi ; and

(*b*) if so, the width of the proposed road ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) கொளச்சலிலிருந்து நீரோடை வரை கடலோரச் சாலை அமைப்பதற்கு 1960–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், இது ஒரு முக்கியமான வழித் தடமாக இருக்கிற காரணத்தால் மறுபடியும் புனர்பரிசீலனை செய்து, இதைச் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : 1960–ல் இதற்கு முதல் எஸ்டிமேட் போடும்போது 5 லட்சம் 91 ஆயிரம் செலவில் திட்டமிட்டது. அதன் பிறகு இரண்டாவது ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் 17 லட்சமாக உயர்ந்த காரணத்தால் அன்றிருந்த நிதி நிலையில் அது சாத்தியம் இல்லையென்று தள்ளிவிட்டார்கள். அங்கத்தினர் கூறுகின்ற நிலையில் மீண்டும் அதைப் புனர் பரிசீலனை செய்வதற்கு யோசிக்கலாம்.

திரு. வ. ஜார்ஜ் : இந்தத் திட்டம் நேஷனல் ஹைவேஸ் திட்டத்தின் கீழ் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு ஒப்புதலுக்கு உட்பட்டுத் தொடங்கிய ஒன்று என்று நினைக்கிறேன். பிறகு இதை விட்ட காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் இந்த ஏற்பாடு எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டேன். ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இருக்கும் என்று ஊகித்துச் சொல்வது சரி அல்ல.

Kotagiri as Tourist Centre

* 176 *Q.*—THIRU K. VINAYAKAM, THIRU J. BELLIE GOWDER : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state—

(*a*) whether there is a proposal to promote and develop Kotagiri in the Nilgiris district as a tourist centre ; and

(*b*) if so, the steps taken by the Government to develop the area ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) முதற்கண் சுற்றுலாப் பயணிகள் தங்குதவற்கு அங்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைக்கவும், பின் கோட்டகிரியிலுள்ள எழிற் காட்சி இடங்களுக்கு இட்டுச் செல்லும் பாதைகளைச் சீரமைக்கவும் அரசு எண்ணியுள்ளது.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : தலைவர் அவர்களே, கோத்தகிரியை ஒரு சுற்றுலா மையமாக உயர்த்த நல்ல வசதி இருக்கிறது. இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திட்டங்களை மேற் கொள்வதற்குத்தான் கோத்தகிரியில் 3·65 ஏக்கர் பரப்புள்ள ஒரு நிலத் தில் அமைந்துள்ள ஒரு கட்டடத்தை (இங்கிலீஷ் கிளப்) விலைக்கு வாங்கி சீரமைத்து சுற்றுலா பயணிகளுக்கு தங்கும் மாளிகையாக மாற்ற எண்ணி யுள்ளது. இம்மாளிகை ஏறத்தாழ ஒரு லட்சம் எழுபத்தி ஐயாயிரம் ரூபாய் பெறும் என்றும் அதற்குமேல் சீரமைப்புக்கு 30 ஆயிரம் ரூபாய் செலவாகலாமென்றும் மாவட்டக் கலெக்டர் தெரிவித்துள்ளார். இம் மாளிகையில் அது அமைந்துள்ள இடத்தையும் லாண்ட் அக்விஸிஷன் ஆக்ட் நடவடிக்கை எடுத்து அரசு மேற்கொள்ள கலெக்டர் அனுப்பியுள்ள நில கையகப்படுத்தும் சட்டத்தின் 4 (1) பிரிவு அறிக்கை அரசிதழில் வெளி யிடப்பட்டிருக்கிறது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : நீலகிரி ஏற்கெனவே பிரசித்தி பெற்ற சுற்றுலா மையமாக இருக்கிறது. அது முன்னர் இருந்தது மாதிரி இல்லை. அங்குள்ள பொடானிகல் கார்டன் கூட சரிவர வைக்கப்படவில்லை. அதன் அட்ராக்ஷன் குறைந்து இருக்கிறது. ஆகவே, அந்த மாதிரி நிலை இல்லாமல் அதை மேலும் நன்கு அபிவிருத்தி செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பயணிகளுக்கு மாளிகைகள் கட்டுவதுதான் இந்த இலாகாவின் பொறுப்பில் இருக்கிறது. பொடானிகல் கார்டனை கவர்ச்சிகரமாக்குவது இந்த இலாகாவின் பொறுப் பல்ல.

திரு. கே. விநாயகம் : கோத்தகிரியில் பயணிகள் தங்க ஒரு மாளிகை கட்டுவதற்காக அதிகம் செலவாவதால் அங்கு தங்குபவர்களுக்குக் கொஞ் சம் அதிகம் ரேட்கள் போடுவதால் வசதி உள்ளவர்கள்தான் அங்கே தங்க முடிகிறதே தவிர, மிடில் க்ளாஸ் பீபிள் போய் தங்குவதற்கும் முடியாமல் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம், சீப் அகாமடேஷன், குறைந்த ரேட்டில் சாப்பாட்டு வசதி கிடைப்பது போன்றவைகளுக்காக ஒரு கட்டடம் கட்டித்தர யோசனை இருக்கிறதா ? அப்போது சாதாரண மக்கள் போய் அனுபவிக்க ஏதுவாக இருக்கும். ஆகவே இது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கோத்தகிரியில் அதுபோல ஒரு செயற்குறிப்பு இல்லை. இருந்தாலும் உதகையில் மாண வர்கள் விடுதி ஒன்று கட்டி மாணவர்கள் விடுமுறைக்குச் செல்லும்போது அப்படி காலியாகிற இடங்களை பயணிகளுக்குக் குறைந்த கட்டணத்திற்கு கொடுக்க ஒரு பெரிய மாளிகை கட்ட உத்தேசம் தற்போது உள்ளது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கோத்தகிரியில் ரூ. 1,76,000 செலவில் நிலம் வாங்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது யாரிடத்திலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இங்கிலீஷ் கிளப் என்ற அந்தக் கட்டடத்தை வாங்க எண்ணியுள்ளது. இவ்வளவு செல வாகும் என்று கலெக்டர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். நிலத்தைக் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வது பற்றி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.